# பதவிய பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜுன் 08 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுலை 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) 19 நிலையான சொத்து விடயங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீர் வேலைகள் களஞ்சிய மீதி ரூபா 216,286 தொகை எனினும் அக் கணக்கு பொதுப் பேரேட்டில் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 02 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சபையினால் ரூபா 9,254,065 தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான அலுவலகங்கள் மற்றும் கடைக் கட்டிடங்களின் மற்றும் சபையினால் 07 மலசலகூடங்கள் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் அதற்கு அடங்கிய தரையின் அளவின் பெறுமதியினை கணித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 33,587,227 தொகைக்கான 06 சொத்துக்கள்/ பொறுப்புக்கள்/ வருமான விடயங்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு/ வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ விரிவான பட்டோலைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,002,672 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 747,505 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

-------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(i) இன் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பகுதிகள் என இனங்கண்ட பகுதிகளை வெளியிடப்பட்டு வீத வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

-------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக ஏற்பாடுகள் 2013 திசெம்பர் 20 திகதிய வர்த்தமானியில் வெளியிட்டிருந்த போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தியிருந்த கட்டணங்கள் அறவிடப்பட கூடிய பாரிய எண்ணிக்கையான அறிவித்தல் பலகைகளில் இருந்து மீளாய்வாண்டின் போது கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 முத்திரைக் கட்டணம்

-------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 129(2)(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைக் கட்டணத் தொகையினை இனங்கண்டு பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்

-------------------------------------------

மீளாய்வாண்டு ஆரம்பம் வரை நிலுவை நீதி மன்றத் தண்டப் பணத் தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 45,533 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

1995 அக்டோபர் 06 திகதி இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 90 ஏக்கர் அளவைக் கொண்ட 18 மயானங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் 2006 நவம்பர் 14 திகதிய இலக்கம் PL/07/01/53 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 9 இன் பிரேரணைகள் மற்றும் விதப்புரைகளின் பிரகாரம் மயானங்களின் உரிமை தீர்மானிப்பதற்கு, உரிமையை உரித்தாக்குவதற்கு, எல்லைகளை அறுதியாக அடையாளமிடல் மற்றும் முறைசாரா கையாடலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்